# இராணுவ காவலரணுக்கு அருகில் வருபவர்களை கண்டதும் சுடுமாறு படையினருக்கு உத்தரவு'

(கொழும்பு)

இராணுவ காவலரண்களுக்கு அருகாமையில் 500மீற்றர் தூரத்திற்குள் வரும் எவரையும் கண்டதும் சுடுமாறு இராணுவத்தினருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

பலாலி பகுதியில் இரு இராணுவ சிப்பாய்கள் கொலைப்பட்டதையடுத்தே இராணுவத்தினருக்கு [illegible] இந்த உத்தரவை பிறப்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகளுக்கும் அரச படையினருக்கு மிடையிலான மோதல் தவிர்ப்பு உடன்பாடு பாரதூரமான சம்பவம் எதுவுமின்றி கடைப்பிடிக்கப்பட்டு வந்த இவ்வேளையில் அரசின் இந்த அறிவிப்பு நிலைமைகளை

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 27 இதழ் 62
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 10-04-1995

## 2 சிப்பாய்கள் கொலை பற்றி புலிகள் ராணுவம் விசாரணை

(கொழும்பு)

இடைக்காட்டுப் பகுதியில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாண இராணுவத் தளபதியும், விடுதலைப் புலிகளின் பிரதேசத் தளபதியும் விசாரணை செய்து வருவதாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் இடைக்காட்டில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில், இராணுவத்தின் கண்காணிப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த இரு சிப்பாய்கள் கொல்லப்பட்டது தெரிந்ததே.

இந்தச் சம்பவம் குறித்து

(4ம் பக்கம் பார்க்க)

## அரசு - புலிகளுக்கிடையில்

# நாலாம் கட்டப் பேச்சுக்கள்

# இன்று காலை ஆரம்பமாகும்

## 'ஹெலி' மூலம் அரச குழு யாழ். வருகிறது

[யாழ்ப்பாணம்]

விடுதலைப் புலிகளுக்கும் அரச பிரதிநிதிகளுக்குமிடையிலான 4-ம் கட்டப் பேச்சுக்கள் இன்று காலை 9-00 மணிக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. இப் பேச்சுக்களில் கலந்து கொள்ளும் அரசு பிரதிநிதிகள் குழு இன்று காலை 8-45 மணிக்கு விசேட ஹெலிகொப்டர் மூலம் யாழ். வந்து சேருவர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் குழுவே வருவதாக இருந்தது

(கொழும்பு)

நாலாம் கட்டப் பேச்சு வார்த்தையில் கலந்து கொள்வதற்கு இரு அமைச்சர்கள் அடங்கிய குழுவே முதலில் யாழ்ப்பாணம் வருவதாக இருந்ததாகவும், எனினும் இறுதி நேரத்தில் இது ரத்துச் செய்யபபட்டுவிட்டதாகவும் கூறப்படுகிறது.

அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்காவும், அமைச்சர் தொடங்கொடவும் மற்றும்

(4ம் பக்கம் பார்க்க)

★ இரு படையினர் பலி

## அரசின் பொய்பிரசாரத்திற்கு புலிகள் பலத்த கண்டனம்

(யாழ்ப்பாணம்)

பலாலிப் பகுதியில் இரு இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட்டுள்ளதாக இராணுவத்தினர் கூறும் சம்பவத்திற்கும் தமக்கும் எதுவித தொடர்புமில்லையென புலிகள் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில்; அச்சுவேலி இடைக்காட்டுப் பகுதியில் இரு இராணுவ சிப்பாய்கள் புலிகளினால் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு மேற்கொண்டு வரும் விஷமத்தன

(2ம் பக்கம் பார்க்க)

## 25ம் திகதி பாரிஸ் மாநாட்டிற்கு சந்திரிகா செல்கிறார்

(கொழும்பு)

இம்மாதம் 27ம் 28ம் திகதிகளில் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெறும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொள்ளுமுகமாக ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான உயர்மட்டக்குழு எதிர்வரும்

(4-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கில் படையினர் முழு உசார் நிலையிலுள்ளனர்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் படையினர் முழு உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பலாலி - தொண்டைமானாறுப் பகுதியில் காவலரணில் இருந்த இரு படையினர் சுட்டுக் கொல்லப் பட்டதைத் தொடர்ந்தே, வடக்கு-கிழக்கில் உள்ள படை முகாம்கள் உஷார்படுத்தப் பட்டு, படையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(2ம் பக்கம் பார்க்க)

## வளலாயில் இருவரை இராணுவம் பிடித்தது

[கோப்பாய்]

வளலாயில் வீடுபார்க்க சென்ற இருவரை இராணுவத்தினர் கைதுசெய்து தம்முடன் கொண்டுசென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் வீட்டில் உள்ள பொருட்கள் எடுத்துவருவதற்காக வளலாய்க்கு சென்ற சந்தையா நடேசு (43 வயது)

(4-ம் பக்கம் பார்க்க)

## சீமெந்து ஆலையை இயங்க வைக்கும் முயற்சி தோல்வி

(கொழும்ப)

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையை இயங்க வைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி, சீமெந்துத் தொழிற்சாலை நிர்வாகம் விதித்த நிபந்தனையால் கைவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் காங்கேசன்துறை லங்கா சீமெந்து நிறுவனத் தொழிற்சங்கப் பிரதிகள் மேற்படி நிறுவன நிர்வாகத்தினரைச் சந்தித்து, தமது சம்பள நிலுவை, சம்பள அதிகரிப்புத் தொடர்பாகப் பேச்சு நடத்தியிருந்தனர்.

(4-ம்பக்கம் பார்க்க)

## வலிகாமம் பகுதியில் தாழப் பறந்து ஹெலி ரோந்து

[பண்டத்தரிப்பு]

வலிவடக்கு, வலிமேற்கு பகுதியில் நேற்று நண்பகலிலிருந்து ஹெலிகொப்டர் ஒன்று பல மணி நேரம் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது.

இப்பகுதியில் தாழப்பறந்து இந்த ஹெலிகொப்டர் பல தடவைகள் வட்டமிட்டதை காணக் கூடியதாயிருந்தது. கடந்த மூன்று மாதங்களின் பின் இவ்வாறு ஹெலிகொப்டர் ஒன்று பல தடவைகள் ரோந்து சுற்றியதால் இப் பகுதிகளில் ஓரளவு பதற்றம் நிலவிவருது.

(2ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### காணி விற்பனைக்கு

நாவற்குழி கண்டி வீதியில் 45 பரப்பு நெற் காணியுடன் கல் வீடும் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்;ஆ ஆனந்தராசா, 414/4, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்' ாணம். [சி-1442[

### வியாழ வக்கிர சஞ்சாரம்

(4-8-95 வரை) யுவவருஷ புத்தாண்டின் எல்லா ராசிப் பலன்களும் (நூலாசிரியர்: சத்யா), பாடசாலை உபகரணங்கள். புத்தகங்கள் 'விற்பனையாகின்றன. தினேஷ் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (சி-1443)


## வலிகாமம்

*(1ம் பக்கத் தொடர்ச்சி)*

இதேவேளை நேற்றும். நேற்று முன்தினமும் பலாலிக்கும் கொழும்பிற்குமிடையிலான விமானப் போக்குவரத்து அதிகரித்துக் காணப்பட்டதும் குறிப்பிடத் க்கது. [72-சி)

## வடக்கு-கிழக்கில்

*(1ம் பக்கத் தொடர்ச்சி)*

இதேவேளை கிழக்கில் கடந்த சில வாரங்களாகப் படையினரின் கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டு வருவதுடன், வீதிச் சோதனைகளும், சுற்றிவளைப்புக்களும் பரவலாக நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது குறித்துப் பொதுமக்கள் பல புகார்களைத் தெரிவித்துள்ளனர்.

மேலும் விடுதலைப் புலிகளின் ஏப்ரல 19ம் திகதிக் காலக்கெடுவை முன்னிட்டும் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. -சி

# தியாகி அன்னை பூபதி நினைவுக் கருத்தரங்கு

*(யாழ்ப்பாணம்)*

தியாகி அன்னை பூபதியின் ஏழாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி இன்று வட்ட சிற்றூர் ரீதியாக நினைவுக் கருததரங்குகள் நடைபெறவுள்ளன.

கருத்தரங்கு நடைபெறும் இடங்களின் பெயர் விபரம் வருமாறு: பளை - முல்லையடி ச. ச. நிலைய மண்டபம், கொடிகாமம் - எழுதுமட்டுவாள், சாவகச்சேரி நகர் முருகமூர்த்தி கோவில், கைதடி குமாரத்திபிட்டி, பருத்தித்துறை நக்கீரன் ச. ச. நிலையம் அல்வாய் வடக்கு, கரவெட்டி-நாவலர் மடம் குவளைப்பிள்ளையார் கோயில், நல்லூர் கலைவாணி ச. ச. நிலையம், பூநாறிமர வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம், அன்புமாறன் ச ச நிலையம் ஆஸ்பத்திரி வீதி, சண்டிலிப்பாய் - கொம்பனிப்புலம் சிறி அம்பாள் ச. ச. நிலையம், சங்கானை- அறிவொளி ச. ச. சநிலையம், வட்டுக்கோட்டை கிழக்கு, பண்டிதர் குடியிருப்பு கெற்பேலி, லவனிதா குடியிருப்பு நாவற்குழி.

இன்று சிரமதானங்கள் நடைபெறும் இடங்களின் விபரம் வருமாறு: பண்டிதர் குடியிருப்பு கெற்பேலி, லவனி ா குடியிருப்பு நாவற்குழி, சண்டிலிப்பாய்- சுதுமலைச் சந்தி முகாம் துப்பரவு, தெல்லிப்பழை- மல்லாகம் சந்தி. ரி

## சைக்கிள் திருட்டு

*(அரியாலை)*

யாழ். நக்காவீதியில் கடந்த 7ம் திகதி பகல் ச. செபஸ்ரியன் என்பவருடைய சைக்கிள் திருட்டுப்போயுள்ளது. 59

## நல்லின கோழி வளர்ப்பு ஊக்குவிப்பு

*(யாழ்ப்பாணம்)*

நல்லினக் கோழி வளர்ப்பை ஊக்குவிக்கு முகமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன விலங்கு வேளாண்மைப் பகுதியினரால் நல்லினக் கோழிகள் விநியோகிக்கப்படுகின்றன.

சிறந்த முட்டை உற்பத்தியைத் தரும் கைசெக்ஸ், லோமன் பிறவுண் ஆகியஇனங்களைச் சேர்ந்த ஒரு நாள் குஞ்சுகளே திருநெல்வேலி மருதம் பண்ணையில் வைத்து விநியோகிக்கப்படுகின்றன. அத்துடன் இப்பண்ணையில் வைத்துகோழி வளர்ப்பு ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## திறப்பு விழா

*(யாழ்ப்பாணம்)*

யாழ் இந்துசமயப் பேரவை அலுவலகம் எதிர்வரும் 12ம் திகதி புதன்கிழமை நல்லை ஆதீன குருமஹா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுடன் பேரவைத் தலைவர் ஆத்ம ஜோதி திரு, நா. முத்தையா வினால் கோயில்வீதியில் நல்லூரில் திறந்துவைக்கப்படும்.

## மிளகாய் செய்கை அதிகரிப்பு

*(அரியாலை[*

யாழ்- மாவட்டத்திலுள்ள அளவெட்டி- மல்லாகம ஊரெழு- ஆகிய பகுதிகளில் இம்முறை மிளகாய் செய்கை அதிகரித்துள்ளது.

தற்பொழுது சந்தைகளுக்கு கறி மிளகாய் வரத்தொடங்கியுள்ளதால் விலை வீழ்ச்சியும் அடைந்துள்ளது. 59

## இரு படையினர்

*(1ம் பக்கத் தொடர்ச்சி)*

மான பிரசாரத்தை விடுதலைபுலிகள்கண்டித்துள்ளனர்

அரசு இவ்வாறானதொரு பிரசாரத்தை சர்வதேச அளவில் மேற்கொண்டு வருகிறது. இருதரப்பிற்குமிடையிலான மோதல் தவிர்ப்பு உடன்பாட்டை புலிகள் மிகக கவனமாக கடைப்பிடித்து வருகிறார்கள். இதுவரை எந்த சந்தர்ப்பத்திலும் அதை மீறவில்லை எனவும் உறுதிப்படுத்துகின்றனர்,

எனினும் அரச படையினரே இதற்கு முன்பு பல தடவைகள் மோதல் தவிர்ப்பு உடன்பாட்டை மீறியுள்ளனர். பொலிஸாரின் அடாவடித்தனங்களால் புலிகளின் போராளி ஒருவர் அண்மையில் சயனைட் அருந்தி வீரச்சாவடைந்தார் கிழக்கில் சில சந்தர்ப்பங்களில் போராளிகளை கைது செய்யும் சந்தர்ப்பங்களும் ஏற்பட்டுள்ளன.

மட்டக்களப்பு பகுதியில் தொடர்ந்து சுற்றிவளைப்புக்களும் மக்கள் கைது செய்யப்படுதலும் தொடர்ந்து இடம்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. யாழ். கடற்பிராந்தியத்தில் கடற்படையினரால் மீனவர் கைது செய்யப்பட்டு தாக்கப்படும் சம்பவங்களும் நடந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர். [சி)

## கிரிக்கெட்: இந்தியா வெற்றி

*(ஷார்ஜா)*

ஷார்ஜாவில் நடைபெறும் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் இந்தியா, இலங்கையை 8 விக்கெட் வித்தியாசத்தால் தோற்கடித்தது.

முதலில் ஆடிய இலங்கை அணி, 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 202 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெயசூரியா 31 ஓட்டங்களையும், அரவிந்த டி சில்வா 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்திய அணியினர் 34.2 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 206 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் ரெண்டுல்கர் ஆட்டம் இழக்காமல் 112 ஓட்டங்களைப் பெற்றார். மனோஜ் பிரபாகர் 60 ஓட்டங்களைப பெற்றார். இதன் மூலம் இந்திய அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது

நாளைய ஆட்டத்தில் பாகிஸ்தான் இலங்கையை எதிர்த்து ஆடும். -சி


# பதவி வெற்றிடம்

கீழ்க்காணும் பதவிகளுக்குரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு எம்மால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. தகமையுடையோர் 13-04-95க்கு முன் கிடைக்கக் கூடியதாக சான்றிதழ்களின் பிரதியுடன் தங்கள் விண்ணப்பங்களை

பொதுமுகாமையாளர், உட்கட்டுமானப்பகுதி,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
இல 10, செம்பியன் லேன், கொக்குவில்.

என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

| | | |
|---|---|---|
| 01 | திட்டமிடல் அலுவலர்: | ஒரு நிறுவனத்தில் திட்டமிடல் அலுவலராக 05 வருட அனுபவம். |
| 02 | பொறியியலாளர்: (இயந்திரவியல்/மின்சாரவியல்/குடிசார்) | சம்பந்தப்பட்ட பொறியியல் பட்டதாரி மூன்று வருட அனுபவத்துடன் அல்லது தொழில் நுட்பவியல் சான்றிதழுடன் 10 வருட அனுபவம் அல்லது முகாரியாகப் 15 வருட அனுபவம். |
| 03 | சிரேஷ்ட/கனிஷ்ட தொழில்நுட்பம் அலுவலர் (நீர்ப்பாசனம்/மின்சாரவியல்/குடிசார்) | தொழில் நுட்பவியல் சான்றிதழுடன் முறையே 10/5 வருட அனுபவம் |
| 04 | படவரைஞர்: (சிரேஷ்ட/கனிஷ்ட) | படவரைஞர் சான்றிதழுடன் முறையே 10/5 வருட அனுபவம் |
| 05 | நிர்வாக உத்தியோகத்தர்: | பட்டதாரி 03 வருட அனுபவம்/அரச தனியார் சேவையில் 15 வருட அனுபவம். |
| 06 | எழுதுவினைஞர்: | க.பொ. த (சா/த) சித்தியடைந்த சான்றிதழுடன்05 வருட அனுபவம் |
| 07 | தட்டெழுத்தாளர்: | தட்டெழுத்துச் சான்றிதழுடன் 02 வருட அனுபவம் |
| 08 | சிற்றூழியர்: | க. பொ. த. (சா/த) சித்தி |

**குறிப்பு:** மேலதிக விபரங்களுக்குமேற்படிவிலாசத்துக்குத் தொடர்பு கொள்ளவும்

(ஏ-4854)



# உலக சுற்றுடல் தினப் போட்டிகள்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழற் பாதுகாப்பு பகுதி உலக சுற்றுடல் தினத்தை முன்னிட்டு சிறுகதை, கவிதை, கட்டுரை, கருத்துப் படம் போன்ற போட்டிகளை நடாத்தவுள்ளது. இப் போட்டிகளின் ஆக்கங்கள் யாவும் சூழல் பாதுகாப்பின் அவசியத்தை ஏடுத்துக் காட்டுவனவாக அமைதல் வேண்டும்.

★ சிறுகதை ★ கட்டுரை
★ கவிதை ★ கருத்துப் படம்

போட்டிகளில் கலந்து கொள்வோர் கடைப்பிடிக்க வேண்டியவை.

- ★ வட தமிழீழ மக்கள் அனைவரும் வயது வேறுபாடின்றி கலந்து கொள்ளலாம்.
- ★ ஆக்கங்கள் யாவும் சூழலின் பாதுகாப்பினை சித்தரிக்கும் வண்ணம் அமைய வேண்டும்
- ★ ஆக்கங்கள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- ★ சிறுகதைகள் யாவும் 1500 சொற்களுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.
- ★ கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
- ★ கட்டுரைகள் நான்கு பக்கங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
- ★ கருத்துப் படங்கள், ஓவியங்கள், சூழல் பாதுகாப்பினை சித்தரிப்பதாகவோ பொருண்மிய வளர்ச்சியினை மேம்படுத்துவதாகவோ இருத்தல் வேண்டும்.
- ★ படைப்பாளரின் பெயர், முகவரி, என்பன தனித் தாளில எழுதப்படுவதுடன் படைப்பாளர் தமது சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.
- ★ போட்டிக்கான ஆக்கங்கள் அனைத்தும் மே 05-ம் திகதிக்குப் பிந்தாமல் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முதன்மைச் செயலகத்திற்கு அனுப்புதல் வேண்டும் பிந்திக் கிடைக்கும் ஆக்கங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.
- ★ நடுவர்களின் தீர்ப்பே முடிவானதும் இறுதியானதுமாகும்.
- ★ போட்டி முடிவுகள் யாவும் 01-06-1995 தினசரி பத்திரிகைகளில் அறிவிக்கப்படும்.

இப்போட்டிகளில் வெற்றியீட்டும் போட்டியாளர்களுககான பரிசில்கள் யாவும் யூன் 05 ம் திகதி நடைபெறும் உலக சுற்றுடல் தின விழாவின்போது வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் ''உலக சுற்றுடல் தினம்'' யூன் 05 என கடித உறையின் இடது பக்க மேல் மூலையில குறிக்கப்பட்டு,

—சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்
முதன்மைச் செயலகம், தாவடி

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். (ஏ-4861)

### மணிவாக்கு

''விதிவலிது'' ''விதிவலிது'' என்று எண்ணி வீணே அஞ்சாதே, அந்த விதியைத் தன்னம்பிக்கையும், நேர்மையான திடவலிவும் கொண்டு எதிர்த்துப் போராடு நிச்சயமாக திருவருள் உனக்குத் துணைநிற்கும்.

—எமர்ஸன்

## நமது நோக்கு

### இஸ்ரேலியர் -ஆய்வு

இஸ்ரேலியர்களுக்கு எதிராகப் பாலஸ்தீனியர்களின் ஜிகாத், ஹாமாஸ் இயக்கங்கள் தற்கொலைத் தாக்குதல்களை நடாத்தி வருகிறார்களல்லவா?

கடந்த ஒன்றரை ஆண்டுக் காலப் பகுதியில் 14 பாலஸ்தீனியர்கள் நடாத்திய தாக்குதல்களில் 37 இஸ்ரேலியர்கள் உயிரிழந்தனர், பலர் படுகாயம் அடைந்தார்கள்.

தன் னிகரில்லாத் தலைமை நாடான அமெரிக்க உதவியிருந்தும், 'மொஸாட்' என்ற உலகிற் சிறந்த உளவுப்படை இருந்தும், இத்தகைய தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த முடியாது இஸ்ரேல் தவிக்கிறது.

தற்போது — புதிய ஞானோதயம் பிறந்துள்ளது. இராணுவப் பாணியான சிந்தனையை ஒதுக்கிவிட்டு, புதிய வழியில் ஆய்வு மேற்கொண்டுள்ளது.

இந்தத் தாக்குதல்களுக்கான காரணமென்ன? இத்தாக்குதல்களை நடாத்தியவர்களின் பின்னணி என்ன?

அவர்களின் பிறப்பு, பெற்ற கல்வி, வாழ்க்கை முறை, குணநலன்கள் ஆகியவற்றின் தகவல்களைத் திரட்டியது.

கணனிப் பொறி மூலம் பகுப்பாய்வுகள் பலசெய்து கண்ட முடிவு என்ன?

அவர்கள் சீரிய பண்பாளர்கள்; மதநம்பிக்கை உள்ளவர்கள். அப்படியாயின் இத் தாக்குதல்களை ஏன் நடத்தினார்கள்? இஸ்ரேலியப் படையினரால் அவர்கள் குடும்பம் ஏதோ ஒரு வகையிற் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

மக்களின் உரிமைக் கோரிக்கைகளின் தாற்பரியத்தை உணராது, ஏகாதிபத்தியச் சிந்தனையை வளர்த்து, இராணுவ பலத்தால் அடக்க முற்பட்டால் எதிர்விளைவுகள் இல்லாமலா போகும்?

பயங்கரவாதம்- அதனைப் போரினாற் . பொசிக்கிடத் துணைக்கு வாரீர்!'' என்று பரணி பாடிக் கொண்டிருந்த மேற்கு நாடுகள், அந்தப் பல்லவி எடுபடாது என்பதை உணர்ந்து வேறு வழியிற் செயல்படத் தொடங்கி உள்ளன.

ஆனால்- அதே பல்லவியை வேறு ராகத்தில், வேறு தாளத்திற் பாடி வெற்றிகாணலாம் என எமது நாடும் அயல் நாடுகளும் சிந்தித்துக்கொண்டிருக்கின்றன.

இஸ்ரேலிய ஆய்வுகளும் அனுபவங்களும் இப் பகுதிக்குப், பாடமாக அமையும் என நம்புகின்றோம்!

# இன்று குருபூசைதினம்
# மனச்சாந்தி தந்தவர் யோகர் சுவாமிகள்

இந்நாட்டில் காலத்துக்குக் காலம் கடையிற் சாமி, செல்லப்பாச்சாமி போன்ற பெரியோர் தோன்றியுள்ளார்கள். இவர்கள் மரபிற் தோன்றியவரே யோகர் சுவாமிகளும், யோகர் சுவாமிகளின் குருவாகிய செல்லப்பாச்சாமி கடையிற் சாமியின் சீஷராவார். இவரை ஞானியென்றும் அறிந்தவர்கள் மிகச் சிலரே,

யோகர் சுவாமிகள் இவரை நல்லூர்த் தேரடியில்தான் சந்தித்தவர் என்பது பின்வரும் அவர் வாக்கால் அறியலாம். சிவதொண்டனில் வெளிவரும் நற்சிந்தனைகளில் தமது குருவைக் கலமனமும் கரையும்படி புகழ்ந்து பாடியிருக்கிறார்,

யோகர் சுவாமிகளும் தமது குருவைப்போல் முற்றுந் துறந்த துறவியாய் இருந்தபோதிலும் யாழ்ப்பாணத்தார் மீது கொண்ட அன்பினால் தமது சுயரூபத்தை சிறிதாக நமக்கு காட்டியுள்ளார்.

சுவாமிகளின் வாழ்க்கையை நாம் உற்றுநோக்கும்போது நமக்கு பிரதானமாகப் புலப்படுவது அவருடைய பூரணமான துறவு நிலையே. அவர் தம்முடைமை என்று ஒன்றையும் கருதுவதும் கிடையாது. அன்பர்கள் கொண்டுபோய்க் கொடுக்கும் பொருள்களில் தாம் உபயோகிப்பது மிகச் சிறிய பகுதியே, ஒருவர் கொண்டுவரும் பழம் முதலியவற்றை மற்றவர்களுக்குக் கொடுப்பதே அவர் வழக்கம். அவருக்குத் தேவையான நேரத்தில் பணம் கிடைக்கும். உடனே அதை செலவுசெய்து விடுவார். தேவையில்லாவிட்டால் யார் எவ்வளவு கஷ்டப்படுத்தினாலும் ஒருவரிடமும் பணம் வாங்கமாட்டார், பற்றற்றவனிடத்திலெல்லாப் பொருள்களும் தாமே வந்தடையும் என்னும் உண்மையை நாம் சுவாமிகளிடம் காண்கின்றோம் சுவாமிகளும் இவ்வுண்மையை ஒருமுறை பின்வருமாறு கூறினார். பிச்சைக்காரரில் இழிவான பிச்சைக்காரனும் நான்தான் மகாராசாக்களில் சிறந்த மகாராசனும் நான்தான் என்கிறார்.

சுவாமிகளின் இன்னுமொரு சிறந்தகுணம் என்னவெனில் ஒரு விஷயத்திலாவது ஒரு மனிதனிலாவது கட்டுப்படுவது கிடையாது. சிற்சில காலங்களில் சிற்சில தொண்டுகளை செய்வார். பின்னர் அவற்றை அறவே விட்டுவிடுவார், சில பிள்ளைகளுக்குச் சங்கீதம் கற்பதற்கு உதவிசெய்யும் பொருட்டு சிலகாலம் வெள்ளிக் கிழமைகளில் வண்ணார்பண்ணையில பஜனை நடத்தினார். பின்னர் இவற்றை விட்டுவிட்டார்.

சுவாமிகள் தம் அடியார்கள் எங்கெங்கு இருந்தார்களோ அங்கெல்லாம் செல்வார். யாருக்கும் அறிவித்தல் கொடுக்கமாட்டார். இருந்தாற்போற் அடியவர் ஒருவர் வீட்டில் தோன்றுவார். கேள்வியுற்ற அடியவர்கள் எல்லோரும் அங்குவந்து கூடுவர். அவர்களுக்கெல்லாம் நல்லுபதேசம் கிடைக்கும். சுவாமிகள் தன்னை ஒரு சிவத்தொண்டன் என்றே கூறிக்கொள்வார்கள்.

சுவாமிகளுடைய சந்நிதியில் ஒருசில நிமிடங்ககள் இருந்தாலும் மனச்சாந்தி ஏற்படுவதை யாரும் உணரலாம். எந்த நேரமும் சுவாமிகள் சாந்தி அலைகளையே வீசிக்கொண்டிருப்பார். சுவாமிகளைச்சூழ எந்த நேரத்திலும் ஒரு ஆன்மீக அலை வீசிக்கொண்டே இருக்கும்.

இத்தகைய சிறப்புமிக்க சுவாமிகள் 1964ம் ஆண்டு பங்குனி மாத ஆயிலிய நட்சத்திரத்திலன்று சமாதியடைந்தார், இவரது குருபூசை இன்றும் சைவ அன்பர்களால் கொண்டாடப்பட்டுவருகிறது.

— பா. தர்சினி

# பிரான்ஸ் மருத்துவ குழுவை வாபஸ் பெற நடவடிக்கை

(கொழும்பு)

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர்த் தவிர்ப்பு உடன்பாட்டைத் தொடர்ந்து நாட்டில் அமைதி நிலவுவதால் தமிழ்ப் பகுதிகளில் கடமையாற்றும் பிரான்ஸ் மருத்துவக் குழு வாபஸ் பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக எம். எஸ். எவ். நிறுவன அதிகாரி ஒருவர் பத்திரிகையாளரிடம் தெரிவிக்கையில் கூறியதாவது

இலங்கையிலுள்ள மருத்துவ மனைகளுக்கு சிறிலங்கா அரசே மருத்துவர்களை நியமிக்கவேண்டும் பிரான்ஸ் மருத்துவ குழுவினரை தமிழீழப் பகுதிகளிலிருந்துவாபஸ் பெறுவது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இதுவரை காலமும் போர் காரணமாக உள்நாட்டு மருத்துவர்கள் வடக்கு - கிழக்கு மருத்துவமனைகளில் பணியாற்ற மறுப்புத் தெரிவித்தமையால் அப்பகுதியில் பணியாற்ற பிரான்ஸ் மருத்துவர்கள் முன்வந்தனர். வடக்கு-கிழக்கில் அமைதி காணப்படுகிறது.

இந்த நிலையில் மருத்துவர்களை நியமிக்க இலங்கை அரசு பின்னடிக்கக்கூடாது. இந்நாட்டு மருத்துவ மனைகளுக்கு இந்நாட்டு மருத்துவ மனைகளுக்கு இந்நாட்டுஅரசே மருத்துவர்களை நியமிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எம். எஸ். எவ். நிறுவனத்தைச் சேர்ந்த பிரான்ஸ் மருத்துவர் குழு யாழ்.மாவட்டத்தில் பருத்தித்துறையிலும், மட்டக்களப்பிலும் கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

-ரி

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995-04-10**

திங்கள் இரவு

8-02 - தளிர்கள் - சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
08-20 - தாயகப்பாடல்கள்
08-30 செய்திகள்
08-40 - தரிசனம் யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி விவசாயீட விரிவுரையாளய கலாநிதி நாகு எதிர் வீரசிங்கம் அவர்களுடனான செவ்வி

**1995-04-11**

செவ்வாய் காலை

07-02 மாவீரவணக்கம்
07-15 இன்றைய தாரகை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 தாயகப்பாடல்கள்

### தமிழீழ வானொலி மாலை ஒலிபரப்பு

**1995-04-10**

திங்கள் மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சிகீதம்
05-10 புதியவை
05-15 ஆழியமுதம்
05-30 மாணவர் பக்கம்
06-00 சிந்தனைக்குச் சில விஞடிகள்
06-02 நேயர் நெஞ்சம்
06-15 விளையாட்டுச்செய்திகள்
06-20 என் தெரிவு
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

# இராசி பலன்

**10-04-1995**

திங்கட்கிழமை

**(தமிழுக்கு பங்குனி-27)**

தசமி முன்னிரவு 10-44 வரை. ஆயிலியம் பி. ப. 5-03 வரை. சித்தயோகம் இராகுகாலம் காலை 7-36 முதல் 9-06 வரை. சுபவேளை நண்பகல் 12-06 முதல் 1-36 வரை.

மேடம்- பயனற்ற பிரயாசம், பணக்கஷ்டம், வேதனை.
இடபம்- அந்நியர் மதிப்பு, காரிய சித்தி, துயர செய்தி.
மிதுனம்- நடைக் கஷ்டம், நிலைமாற்றம், அகால உணவு.
கடகம்- வாக்கு வசீகரம், தொழில் உறவு, பயண நன்மை.
சிங்கம்- ரோக பீடை. வேலைப்பளு, விதண்டாவாதம்
கன்னி- நண்பர் சகவாசம், குடும்ப சுகம், பெரியோர்ஆசி.
துலாம்- அதிகாரச் சிறப்பு, தொழில் சித்தி, தெய்வீகப் பணி.
விருச்சிகம்- வஞ்சிக்கப்படல், உதவிக்குறைவு: மனச்சுமை.
தனுசு- மனப்போராட்டம், தொழில் நஷ்டம், மனைவி துயர்.
மகரம்- அந்நியர் உதவி. மனைச்சிறப்பு, சுபகாரியம்.
கும்பம்- பணியாள் ஒத்துழைப்பு, பெண் அறிவுரை, உல்லாசம்.
மீனம்- ஒதுக்கப்படல் தொழில் பகை, குழம்பிப் போதல்.

- ஜோஸ்யர்

# இணைப்பு பல்கலைக்கழகங்களை தேசியபல்கலைக்கழகமாக்குக

(யாழ்ப்பாணம்)

இணைப்பு பல்கலைக் கழகங்களை தேசிய பல்கலைக்கழக பீடமாக்குக என்று தேசிய இணைந்த பல்கலைக்கழக மாணவர் சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாம் இணைப்புப் பல்கலைக் கழகங்களை தேசிய பல்கலைக் கழக பீடமாக்குமாறு கேட்பதன் நோக்கம் தற்போது இணைப்புப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர் தொகையைவிடக் கூடுதலான தொகையினர் தேசிய பல்கலைக்கழகங்களில் நடைபெறும் பாடத்திட்டங்களுக்கு பல்கலைக்கழகங்களுக்கு மாணவர் அனுமதிக்கப்படும் முறையில் சோத்துக்கொண்டு அவர்களை தேசிய பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி அளித்து அல்லது இணைப்புபல்கலைக் கழகங்களை தேசிய பல்கலைக்கழக பீடங்களாக்கி அவர்களுக்கு அவற்றின் மூலம் உயர்கல்வியைப் பெறுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திகொடுப்பதென்பதேயாகும்.

மாணவர் இயக்கத்தின் எழுச்சிக்காக எவ்வித கருத்து வேற்றுமைகளுமின்றி இன்று தேசிய இணைப்புப் பல்கலைக் கழக மாணவர் முன்னணியும், தேசிய பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் இக்கோரிக்கைகளுக்காக முன்வந்துள்ளன என்பதை அறிக்கையிடுகின்றோம்.

ரி

### பலதும் பத்தும்

#### வெள்ளாட்டுப்பால்

வெள்ளாட்டுப் பால் மருத்துவத்திலும் பயன்படுகிறது. வாயு நோய்கள், இரைப்பு, நீரழிவு, மேக வெட்டை, சீதபேதி, வயிற்றுப்போக்கு, மூலம், பித்தக் காய்ச்சல், இருமல் போன்ற நோயுள்ளவர்களுக்கு இது நல்ல மருந்தாக அமைகிறதாம்.

மருந்துகள் சிலவற்றிற்குத் துணையாகவும் பயன்படுத்தப்படுகின்றது. இது விரைவாகச் செரிக்கும் தன்மை வாய்ந்தது. உடலில் வெப்பத்தை உண்டாக்கும் தன்மை உடையதாதலின் 'ஆஸ்த்துமா நோயாளர்களுக்கு ஏற்றதாம்'

வெள்ளாட்டுப் பாலுக்கு இந்த மருத்துவக் குணம் எப்படி ஏற்பட்டது? வெள்ளாடுகள்... கண்ணிற்படும் அத்தனை மூலிகைகளையும்... கண்டபடி கடித்து விழுங்கும் பழக்கமுடையவை.

மகாத்மா காந்தியுடன் ஆடும் உலாவி வந்ததால் அப்பாலின் சிறப்புக்கு நல்ல பிரசாரம் கிடைத்ததல்லவா?

— மயூரன்

### தவக்கால நற்சிந்தனை

''எங்கள் குற்றம் கண்டு இரக்கம் கொண்டவர் நீர் ஒருவரே''

சந்திரனில் மனிதனின் முதல் அடி. உலகமே வியந்து பாராட்டியது. இங்கே சிலுவையின் பாதையிலே முதல் அடி வைக்கிறார் யேசு. இதைப் பார்த்தோமா? நோக்கினோமா? வியந்தோமா? சிந்தித்தோமா? அவரது சிலுவையின் பாதை எமக்காக அவர் முன் நடக்கிறார். நாம் பின் தொடர்வோமா?

— தா. மைதிலி

நாம் வாழ எம்மண்ணில் வளமுண்டு-ஏன்
மண்டியிட வேண்டும் மாற்றனிடம்

# சுவாமியின்கூட்டத்தைகுழப்ப அ.தி.மு.க. குண்டர் வன்முறை

(சென்னை)

ஜனதா கட்சித்தலைவரும் சர்ச்சைக்குரிய தலைவருமான டாக்டர்சுப்பிரமணிய சுவாமியின் கூட்டத்தில் அ தி மு. க. குண்டர் படை ஈடுபட்டு கூட்டத்தை குழப்ப முயற்சித்துள்ளது,

சென்னையில் நேற்று முன் தினம் இரவு சுப்பிரமணிய சுவாமியின் கூட்டம் நடை பெற்றுக்கொண்டிருந்த போது சுப்பிரமணிய சுவாமிக்கு எதிராக கண்டனக் கோஷங்களுடன் வந்த பலர் அங்கிருந்தவர்களை தாக்கியதுடன் கல்வீச்சு மற்றும் தடியடியையும் நடாத்தி வன்செயலில் ஈடுபட்டனர்.

எனினும் மேடையில் இருந்த சுப்பிரமணிய சுவாமி உட்பட பலர் எதுவித ஆபத்துமின்றி தப்பித்துக்கொண்டனர். வன்செயலையடுத்து கூட்டம் ஓரளவு குழம்பிப் போனதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இச்சம்பவம் பற்றி திரு. சுப்பிரமணிய சுவாமி நேற்று காலை தமிழக ஆளுநர் சென்னா ரெட்டியை நேரில் சந்தித்து புகார் மனு ஒன்றை கையளித்ததுடன் இச்சமபவம்பற்றி விரிவான விளக்கத்தினையும் அளித்துள்ளார்.

இதேவேளை இச்சம்பவம் குறித்து தி மு. க. தலைவர் மு. கருணாநிதி, மறுமலர்ச்சி கழக தி. மு. க. தலைவர் வை. கோபாலசாமி, எம். ஜி. ஆர் அ. தி. மு. க, தலைவர் திரு. நாவுக்கரசு உட்பட பலரும் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக மு. கருணாநிதி வெளியிட்ட அறிக்கையில் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுவிட்டது என்பதையே இத்தாக்குதல் சம்பவம் எடுததுக்காட்டுவதாக தெரிவித்துள்ளார்

டாக்டர் சுப்பிரமணிய சுவாமியின் மீதான எத்தகைய தாக்குதல் சம்பவத்திற்கும் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவே பொறுப்பு ஏற்கவேண்டுமென தமிழக எதிர்க்கட்சித்தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

க-சி

## இராணுவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மோசமடையச் செய்யலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி சம்பவம் தொடர்பாக கொழும்பில் படைத் தலைமைகூடி ஆராய்ந்ததாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

-சி-ம

## சிமெந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்போதே சீமெந்துத் தொழிற்சாலையை மீள இயங்க வைப்பது தொடர்பான ஆலோசனைகள் தெரிவிக்கப் பட்டன.

சீமெந்துத் தொழிற்சாலை ஊழியர்களை அங்குள்ள விடுதிகளில் தங்கவைத்து தொழிற்காலையை மீண்டும் இயங்க வைப்பதற்குத் தலைமைப் பீடம் நிபந்தனைகளை விதித்ததுடன், ஊழியர்கள் மாதம் தோறும் தமது வீடுகளுக்குச் சென்று வருவதற்கு அனுமதி அளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் இந்த நிபந்தனைகளுக்கு ஊழியர்கள் இணங்காதால், தொழிற்சாலையை இயங்க வைக்கும் முயற்சி கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

-சி

## 2 சிப்பாய்கள்

(1ம் பககத் தொடர்ச்சி)

நடவடிக்கைகள் பணியகம் நேற்று வெளியிட்ட அறிககை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தொண்டமானாறு பகுதியில் இருந்து இராணுவத்தினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது: தாக்கியவர்கள் தப்பி ஓடிவிட்டனர்,

இராணுவத்தினர் பதில் தாக்குதல் நடத்தினர்கள். தாக்கியவர்கள் தரப்பில் ஏற்பட்ட சேதங்கள் குறித்தோ, தாக்குதலுக்கான காரணங்கள் பற்றியோ தெரியவில்லை என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து பாதுகாப்புப் படையினர் அந்தப் பகுதி விடுதலைப் புலிகள் தளபதி செல்வராசாவுக்கு அறிவித்ததும். அந்தத் தாக்குதலில் தங்கள் போராளிகள் எவரும் சம்பந்தப்படவில்லை என்று அவர் பதில் அளித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடைசெய்யப்பட்ட அந்தப் பகுதியிலிருந்து விடுதலைப் புலிகள் போராளிகள் எவரும் வரவில்லை என்பதை, தளபதி செல்வராசா படையினருக்கு உறுதி அளித்திருப்பதாகவும் நடவடிக்கைத் தலைமை அலுவலக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக அந்தப் பகுதித் தளபதி செல்வராசாவும், பலாலி பாதுகாப்புப் படைத் தளபதி மேஜர் ஜெனரல் வீரசூரியாவும் தொடர்ந்து ஆராய்ந்து வருவதாகவும், விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அந்தப் பகுதியில் தொடர்ந்து எதுவித சம்பவமும் இடம்பெற்றது பற்றி எதுவும் அறிவிக்கப்படவில்லை என்றும் அரசு நேற்றுத் தெரிவித்தது.

இ-சி

## அரசு- புலிகளுக்கிடை

(1ம்பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பேச்சுவார்த்தையில் விடுதலைப்புலிகள் சார்பில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன், தமிழீழ நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் திரு. டொமினிக், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பொறுப்காளர் திரு. ரவி ஆகியோர் பலந்து கொள்வர்.

அரசகுழுவில் ஜனாதிபதியின் செயலர் திரு. கே. பாலபத்கபெண்டி, அங்கலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோ, கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர்ஜெயதேவ உயாங்கொட' இராணுவ அதிகாரி பிரிகேடியர் சிறி பீரிஸ், கடற்படை அதிகாரி கப்டன் பிரசன்னா ராஜரட்ண ஆகியோர் கலந்து கொள்வா?

இன்று காலை 7 மணியளவில் கொழும்பிலிருந்து விமான மூலம் வரும் அரச குழு8 மணியளவில் பலாலியை வந்தடைவர். அங்கிருந்து 8-45 மணியளவில் யாழ். வந்தடைவர். காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் பேச்சுக்கள் காலையும் மாலையுமாக இரு சுற்றுககளாக இடம்பெறும்.

அண்மையில் தலைவர் பிரபாகரனுக்கு ஜனாதிபதி சந்திரிகா எழுதய கடிதத்தில் எரிபொருள் தடை, மீன்பிடித் தடையை நீக்குவதற்கு இணக்கம் தெரிவித்திருந்தார் இதற்கமைய இன்றைய பேச்சுக்களில் ஜனாதிபதியின் மேற்படி முடிவுகளை அமுல் படுத்துவது தொடர்பான நடைமுறைகளை ஆராய்தலும் பூநகரி இராணுவ முகாமை அகற்றி போககுவரத்து பாதையை திறத்தல் கிழக்கு மாகாணத்தில் போராளிகள் ஆயுதங்களுடன் நடமாடுதல் ஆகியவிடயங்களுக்கான தீர்வுகள் ஆராய்ந்தலுமே இடம் பெறும் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

### புலிகள் அதிருப்தி

இதேவேளை திரு. பிரபாகரன், முடிவுகளை எடுக்கக் கூடிய அதிகாரமுள்ள குழுவை அனுப்புமாறு கேட்டிருந்த போதும் அரசுதரப்பிலிருந்து இன்று பேச்சுக்களில் பங்கு பற்றும் குழுவில் இடம்பெறவுள்ள பிரதிநிதிகள் எந்தவிதமான முடிவுகளையும் எடுக்கும் அதிகாரம் அற்றவர்களாகவே உள்ளனர் என புலிகளின்உத்தியோகபூர்வ வட்டாரங்கள் அதிருபதி தெரிவித்துள்ளன.

முடிவுகளை அமுல்படுத்துவதற்கோ, அரசின் முன்னைய முடிவுகளை மீண்டும் வலியுறுத்துவதற்கோ அரசின் குழு மீண்டும வருகின்றது. என்பது தெளிவாகவில்லை எனவும் புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

-சி

## கஞ்சிகுடிச்சாறில் இனந்தெரியாதோர் துப்பாககிச் சூடு

(கொழும்பு)

மட்டக்களப்பு கஞ்சிகுடிச்சாறு பகுதியில் காட்டுப் பகுதியில் ஊடுருவிய இனந்தெரியாத குழுவொன்று வானை நோக்கி துபபாக்கிச்சூடுநடாத்தியதுடன் காட்டிற்கு நெருப்பு வைத்துள்ளதாக கொழும்பில் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக படையினர் விசாரணைகளை நடாத்திவருவதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பவம் நேற்று நடைபெற்றதாகவும் படையினர் தெரிவித்துள்ளனர்.

-சி

## யாழ். மாவட்டத்திற்கு 13 தொலைபேசி இணைப்பு?

பாதுகாப்பு அமைச்சு அனுமதி

[யாழ்ப்பாணம்[

யாழ். மாவட்டத்தில் 13 தொலைபேசி இணைப்புக்களை ஏற்படுத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கி இருப்பதாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கே பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இது குறித்து கொழும்பில் 'ரெலிகொம்' நிறுவனம் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளை கலந்தாலோசித்ததை அடுத்து யாழ் மாவட்டத்தில் பொது மக்கள் பாவனைக்கென 5 தொலைபேசி இணைப்புக்களையும் திணைக்களங்களுக்கு 8 தொலைபேசி இணைப்புக்களையும் ஏற்படுத்த முடிவு செய்யப் பட்டுள்ளது.

இத்தொலைபேசி இணைப்புக்கள் யாழ்ப்பாணம் பொது மருத்துவமனை, யாழ். பல்கலைக்கழகம் இலங்கை வங்கி, மக்கள் வங்கி தலைமையகம், கல்வித் திணைக்களம் சுகாதார சேவை திணைக்களம், யாழ். மாநகரசபை, மின்சாரசபை, யாழ்ப்பாண பிரதம தபாலகம் ஆகியவற்றில் இணைக்கப் படவுள்ளதாக தெரிவித்தார்.

[ம - சி]

## வளலாயில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இரத்தினம் யோகசுந்தரம் [வண்ணம்] என அழைக்கப்படும் இருவருமே இராணுவத்தால் பிடித்து செல்லப்பட்டவர்களாவர்.

இராணுவத்தினரிடம் பிடிபட்ட மேற்படி இருவரும் தொடர்ச்சியாக இப்பகுதிகளுக்கு சென்று வருபவர்கள் என்றும் சம்பவதினம் பகல் இரண்டு மணியளவில் ஆவரங்காலில் இருந்து புறப்பட்ட நடேசு தனது மருமகனை [வண்ணம்] என்பவரையும் அழைத்துக்கொண்டு சென்ற போதே இராணுவத்திடம் பிடிபட்டனர்.

இவர்கள் மறுநாளும் வீடு திரும்பாததையடுத்து உறவினர் வளலாய்க்கு சென்று பார்த்தபோது இவர்கள் சென்ற சைக்கிள்கள் வளவொன்றில் இருப்பதை கண்டு எடுத்து வந்துள்ளனர். இவர்களுக்கு என்னநடந்தது என்று இதுவரை தெரியவில்லை. எனினும் இவர்கள் படையினரிடப் சிக்கியிருக்கலாமென எதிர் பார்க்கப்படுகிறது.

-166-சி

## அமைச்சர்

1-ம் பக்கத் தொடர்ச்சி

சில அதிகாரிகளுமே நாலாம் கட்டப் பேச்சுக்களுக்கு அனுப்பப்படுவற்தகாக முதலில் ஜனாதிபதி சந்திரிகாவினால் தெரிவு செய்யப்பட்டிருந்தனராம்.

எனினும் ஜனாதிபதி இறுதி நேரத்தில் இந்தக் குழுவை மாற்றி அமைத்ததாகவும் கூறப்படுகிறது. அரசுத் தரபபில் யாழ்ப்பாணம் வரும் பேச்சுவார்த்தைக் குழு குறித்துக் கொழும்பிலும் ஆச்சரியம் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்

-சி

## 25ம் திகதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

23ம் திகதி பாரிஸ் புறப்படவுள்ளது-

இக்குழுவில் பிரதிநிதி அமைச்சரும் நீதிஅரசியல் விவகார அமைச்சருமான ஜி, எஸ். பீரிஸ் திறைசேரியின் செத்லாளர் ஜே. எஸ். ஜெபரயதின ஆகியோரும் அங்கம் வகிக்கவுளளனர்.

கடந்த ஆகஸ்டில் பொதுசன ஐககிய முன்னணி அரசாங்கம் பதவேற்ற பின் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நடைபெறுவது இது வ முதல் முறை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது

கடந்த 1993ம் ஆண்டு பாரிஸில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங நாடுகளின் கூட்டத்தில் அப்போதைய ஐ. தே. கட்சியின் போது பிரதமரான ரணில் விக்கிரமசிங்க இக் கூட்டத்தில் கலந்து சொண்டமை தெரிந்ததே.

க-சி

## மரண அறிவித்தல்

### திருமதி க. திகலவதி

பொன்னாலையைச் சேர்ந்த திருமதி க. திலகவதி அவுஸ்திரேலியாவில் காலமானார். இவர் கனகசபையின் அன்பு மனைவியும் திருமதி கோ. ஜெயந்தி, திருமதி அ. ஆனந்தி (ஜெர்மன்), க. அருளாளன் (அவுஸ்திரேலியா), அவர்களின் பாசமிகுதாயாரும், க. கோபால் (ஈழநாடு), அருமைத்துரை, ஞானேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், கீர்த்தன். கீதாஞ்சலி, ரஜிதா, விதுரா, சரண்யா ஆகியோரின் பாசமிகு பேத்தியும், திருமதி க. கண்மணியின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவுஸ்திரேலியாவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
சி. கனகசபை
(கணவர்)

(சி- 1444)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 10ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Reg stered as a Neaws paper a the General Post office ...Lanka under Li en e nu nber B/1633613.

## இனப் பிரச்னை தீர்வு விடயத்தில் ஐ.தேகவின் கொள்கையையே புதிய அரசு கடைப்பிடிக்கிறது

[கொழும்பு]

இனப்பிரச்சனை தீர்வு குறித்து ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அன்று கடைப்பிடித்த கொள்கைகளையே இன்றைய பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கமும் கடைப்பிடித்து வருவதாக கடந்த ஜனாதிபகித் தேர்தலில் போட்டியிட்ட ஜே. வி. பி. வேட்பாளரான நிஹால் கலப்பதி தெரிவித்துள்ளார்.

இலங்கை முற்போக்கு முன்னணி ஏற்பாடு செய்த வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; அன்றைப ஐக்கிய தேசியக்கட்சியினர் இனப்பிரச்னை தீர்வு பற்றி எந்தவித அடிப்படைத்தீர்வுத்திட்டத்தையும் கொண்டிருக்கவில்லை. அதேபோன்றே இன்றைய பொ. ச. மு. அரசும் செயற்பட்டு வருகிறது.

ஆட்சியை கைப்பற்றுவதற்காக புதிய அரசாஙகம் தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதிகள் இன்று காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளன. இனப்பிரச்னை தீர்வு விடயத்தில் புதிய அரசின் செயற்பாடும் ஏமாற்று வேலையாகவே இருப்பதாகவும் தெரிவித்தார்.

[க - சி]